ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1644/26 - 2010 මාර්තු 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.03.11
*1644/26 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ( இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்

இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8 இன் (1) ஆம் துணைப் பிரிவுகளினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கையிலுள்ள அல்லது வதியும் ஆட்கள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு வங்கியிலும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும், பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது எந்தவொரு வெளிநாட்டு வங்கியிலுமுள்ள அத்தகைய கணக்குகளை மூடுவதற்கும் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு இத்தால் பொதுவான அனுமதி வழங்கப்படுகிறது.

**கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்ட ஆட்கள் :**

1. (i) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாக சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர் ;

(ii) இலங்கையில் வதிகின்ற அதேவேளையில் இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழில் பயிற்சி பணிகளை வழங்குகின்ற தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பனியொன்று அல்லது நிறுவனம் ;

(iii) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று ;

(iv) வெளிநாட்டில், வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று ;

(v) வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமொருவர்.

**கணக்குகளிற்கான வரவுகள் :**

2. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அல்லது சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகளின் கீழ் இலங்கைக்கு வெளியே சட்ட ரீதியாகக் கிடைக்கப்பெற்ற அல்லது ஈட்டிய அல்லது கணக்கு வைத்திருப்பவரின் அனுமதிக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடமிருந்து பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை இக்கணக்குகளில் வரவு வைக்கலாம்.

**கணக்குகளிற்கான பற்றுக்கள் :**

3. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அல்லது சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள். அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகளின் கீழ் இலங்கையில் வதியும் ஆளொருவருக்காக கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இக்கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்த முடியும்.

**கணக்குகளை மூடிவிடுதல் :**

4. இத்தால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கிகளில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் கணக்கொன்று மூடப்படுமிடத்து கணக்கிலுள்ள மீதி அத்தகைய கணக்கு மூடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

5. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறிவித்தலில்–

(i) "அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது தங்கம் அல்லது ஏதேனும் நாணயம் தொடர்பில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும் ;

(ii) "அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

(iii) "வெளிநாட்டு நாணயம்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும் ;

(iv) "நாணயம்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும் ;

(v) "இலங்கையில் வதியும் ஆள்" அல்லது "இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37 (i) ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட பணிப்பிலும், 1972, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 15,007 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரையிலும் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2010, மாச்சு 11.

3- 895

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.